# தமிழ்நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24312841.*


<u>வழக்கு எண்.24475/விசாரணை/09</u>

**<u>விசாரணை நாள் 29.01..2010 – இராமநாதபுரம்</u>**

| | |
|---|---|
| முன்னிலை | முனைவர் (திரு) ஆர். பெருமாள்சாமி, எம்.ஏ.,எம்.பில்.,பி.எச்.டி.,<br>மாநில தகவல் ஆணையர் |
| மனுதாரர் | திரு. சு. ரவி<br>த/பெ. பி. சுப்பு<br>17, காந்தி நகர், கே.கே.நகர் அஞ்சல்<br>திருச்சி – 21. |
| பொது அதிகார அமைப்பு | பொதுத் தகவல் அலுவலர்<br>ஆணையாளர் அலுவலகம்<br>திருச்சிராப்பள்ளி நகராட்சி<br>திருச்சிராப்பள்ளி. |

---

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இவ்வாணையத்தால் இன்று (29.01.2010) நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திரு. சு. ரவி, பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர் திருமதி. ஏ. ஜகதீஸ்வரி, உதவி ஆணையர், பொன்மலை கோட்டம், திருச்சிராப்பள்ளி நகராட்சி, திருச்சிராப்பள்ளி வந்திருந்தனர்.

தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 சட்டப்பிரிவு 6(1)ன் கீழ் மனுதாரர் 17.08.09 அன்று பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பிய மனுவில் வார்டு 47, டி.எஸ் எண்.18/2, வார்டு J, Block 30 இடத்திற்கு வரைபட நகல் வழங்காதது சம்பந்தமாக தகவல் வழங்குமாறு கோரியிருந்தார். பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு 17.9.09 அன்று தகவல் வழங்கியுள்ளார். பொதுத்

தகவல் அலுவலர் வழங்கிய தகவல் முழுமையாகயில்லை என்று மனுதாரர் சட்டப்பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீடு செய்யாமல், சட்டப்பிரிவு 19(3)ன் கீழ் 29.09.09 அன்று இவ்வாணையத்திற்கு இரண்டாவது மேல்முறையீடு செய்ததன் அடிப்படையில் இவ்வழக்கு சட்டப்பிரிவு 18(3)ன் கீழ் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இன்றைய விசாரணையின் போது பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய தகவலை முழுமையாக வழங்கவில்லையென்று இவ்வாணையம் கருதுகிறது. எனவே, பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் மேலே கோரிய தகவலை அரசு ஆவணங்களில் உள்ளபடி முழுமையான, சரியான தகவலை இவ்வாணை கிடைத்த இரண்டு வாரங்களுக்குள் மனுதாரருக்கு வழங்கி, மனுதாரரின் கையொப்பம் பெற்ற நகலையும், தகவல் வழங்கிய விபரத்தையும் இவ்வாணையத்திற்கு மூன்று வாரங்களுக்குள் அனுப்பி வைக்குமாறு உத்தரவிடப்படுகிறது.

தமிழ்நாடு தகவல் ஆணையம்.

ஒப்புதல் பெறப்பட்ட நாள் 09.2.2010
ஆணையத்தின் ஆணைப்படி.

உதவிப் பதிவாளர்.

<u>வழக்கு எண்.24475/09</u>
பொதுத் தகவல் அலுவலர்
ஆணையாளர் அலுவலகம்
திருச்சி மாநகராட்சி
திருச்சிராப்பள்ளி.

திரு. சு. ரவி, த/பெ. பி. சுப்பு
17, காந்தி நகர்
கே. கே. நகர் அஞ்சல்
திருச்சி – 21.